

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி நேற்று முன்தினம் (28.2.2026) சென்னை, சிறுமலர் பார்வை மற்றும் செவித்திறன் குறைபாடுடையோர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கேக் வெட்டி, மாணவ, மாணவியர்களுக்கு ஊட்டினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி நேற்று முன்தினம் (28.2.2026) சென்னை, சிறுமலர் பார்வை மற்றும் செவித்திறன் குறைபாடுடையோர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி நேற்று முன்தினம் (28.2.2026) சென்னை, சிறுமலர் பார்வை மற்றும் செவித்திறன் குறைபாடுடையோர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவ, மாணவியர்களுக்கு உணவு பரிமாறினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா. எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, பகுதி செயலாளர் அன்புதுரை, கழக செயற்குழு உறுப்பினர் வி.எஸ்.ராஜ், சிறுமலர் மேல்நிலைப் பள்ளியின் முன்னாள் முதன்மை அருட்சகோதரி சவேரியா, முதன்மை அருட்சகோதரி ரோஸ்லைன், தாளாளர் அருட்சகோதரி ஜெம்பா, பள்ளி முதல்வர் அருட்சகோதரி பெர்பைன், தலைமை ஆசிரியை திருமதி நிர்மா ராணி, பள்ளியின் நிர்வாகிகள், ஆசிரியர் பெருமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## சட்டப்பேரவைத் தேர்தல்: தி.மு.க. தலைமையிலான

# மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் - இந்திய யூனியன் முஸ்லிம் லீக் - மனித நேய மக்கள் கட்சி - தலா 2 தொகுதிகளில் போட்டி!

### சென்னை – அண்ணா அறிவாலயத்தில் – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம்!





**சட்டப்பேரவைத் தேர்தல் - 2026**

நடைபெற உள்ள 2026 சட்டப்பேரவை பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் – இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் பேராசிரியர் திரு.கே.எம்.காதர்மொகிதீன் அவர்களும் இன்று (28–02–2026) தொகுதி உடன்பாடுகள் குறித்து கலந்து பேசியதில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி, தமிழ்நாட்டில் 2 (இரண்டு) சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது.

இந்த பேச்சு வார்த்தையின்போது இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் பொதுச்செயலாளர் கே.எ.எம்.முஹம்மது அபூபக்கர், எம்.எல்.ஏ., பொருளாளர் எம்.எஸ்.எ.சாஜஹான், முதன்மை துணைத் தலைவர் எம்.அப்துல்ரகுமான், துணைத் தலைவர் கே.நவாஸ்கனி, எம்.பி., – கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர்கள் திருச்சி சிவா, ஆ.இராசா, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் உடனிருந்தனர்.

(கே.எம்.காதர்மொகிதீன்)
தலைவர்,
இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி

28/2/2026
(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

**சட்டப்பேரவைத் தேர்தல் - 2026**

நடைபெற உள்ள 2026 சட்டப்பேரவை பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் – மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் திரு.எம்.எச்.ஜவாஹிருல்லா அவர்களும் இன்று (28–02–2026) தொகுதி உடன்பாடுகள் குறித்து கலந்து பேசியதில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள மனிதநேய மக்கள் கட்சி, தமிழ்நாட்டில் 2 (இரண்டு) சட்டமன்றத் தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது.

இந்த பேச்சு வார்த்தையின்போது மனித நேய மக்கள் கட்சியின் பொதுச்செயலாளர் ப.அப்துல்சமது, எம்.எல்.ஏ., பொருளாளர் கோவை உமர் – கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர்கள் திருச்சி சிவா, ஆ.இராசா, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் உடனிருந்தனர்.

28.02.26
(எம்.எச்.ஜவாஹிருல்லா)
தலைவர்,
மனித நேய மக்கள் கட்சி

28/2/2026
(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.